[11th February 1958

Ramakrishna High School, Tirupattur

* 41 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any representation has been received recently to the effect that salaries have not been paid for the last five months to the teachers of the Ramakrishna High School, Tirupattur, North Arcot district; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Under instructions from the Director of Public Instruction, the management of the school has disbursed on 21st October 1957 in the presence of the District Educational Officer the arrears of salaries due to the teachers by utilising the teaching grant sanctioned for the school.

Loans to joint patta-holders

* 42 *Q.*—Sri P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any complaint has been received by the Government that the joint patta-holders are experiencing difficulties in getting Government loans; and

(*b*) if so, the steps taken by the Government to relieve them of these difficulties?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes. A representation was made on the floor of the House in Mach, 1956.

(*b*) The Government have issued orders permitting the grant of takkavi loans even in cases where applications are received from one of the joint patta-holders alone without insisting on subdivision and separate registry of the land proposed to be hypothecated, provided the holding of such a person is clearly identifiable on ground and belongs to him exclusively. This concession applies to both surveyed and unsurveyed areas. This liberalized procedure has been ordered to be in force for a period of two years from July 1957 in the first instance.

Sri A. R. MARIMUTHU : கூட்டு நிலங்கள் இருப்பதில் பல சிரமங்கள் இருப்பதினால், கூட்டு நிலங்களை கட்டாயமாக பிரித்து சர்வே செய்வதற்கு சர்க்கார் உத்தரவு இடுவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி கடன் கொடுப்பது பற்றியது. கூட்டுப் பட்டாவாக இருந்தாலும் கூட ஒன்றும் பாதகமில்லாமல் ஓராளவுக்கு நிலம் அவனுக்கு சொந்தமாக இருந்தால், கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நிலங்களை பிரித்து தனியாக பட்டா வழங்குவது வேறு விஷயம். தனிப் பட்டா வேண்டுமானால், அதற்கு பிரத்தியேகமாக விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

11th February 1958]

SRI S. LAZAR : இது போன்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருந்தும்கூட இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை கடன் கொடுக்கப் படாமல் சர்க்காரிடமே இருந்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா? அதிலும் சமுதாய நலத் திட்டம் பகுதிகளிலே கடன்கள் வினியோகிக்கப் படாமல் இருக்கின்றன என்பது சர்க்காருக்குத் தெரியுமா? ஆகவே, மேலும் ஏதாவது சீர்திருத்தம் கொண்டு வருவதற்கு சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : சர்க்கார் பணமும் மற்ற தனிப்பட்டவர்கள் பணம் போலத்தான். சர்க்காரும் தங்கள் பணத்தைக் காப்பாற்றவேண்டும். ஆதலால் ஒரளவுக்கு ஏதாவது தகுந்த நிலம் இருந்தால்தான் கடன் கொடுக்கலாமே தவிர, பணத்தை வாரி இறைத்துவிட முடியாது.

MR. SPEAKER : கேள்விகள் 43, 50-ஏ இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படும்.

Bauxite.

* 43 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any report from the U.S.A. about samples of Bauxite ore sent for testing; and

(*b*) if so, whether a copy of it will be placed on the Table of the House?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Aluminium plant at Mettur.

* 50-A *Q.*—SRI M. P. SUBRAMANIAM, SRI K. SATTANATHA KARAYALAR AND SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to answer given to question No. 104 on 7th November 1957, the present state of the proposal to set up an aluminium plant at Mettur in Salem district?

THE HON. SRI R. VENKATARAMAN : Arrangements are being made by the Government of India to make an accurate assessment of the quality and quantity of bauxite deposits in the Shevaroys area, as a preliminary step, to the establishment of the aluminium smelter.

SRI M. P. SUBRAMANIAM : ரூ. 24 கோடி செலவில் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அலுமினியம் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு மத்திய சர்க்கார் ஒப்புக்கொண்டதாக பத்திரிகையில் வந்த செய்தி உண்மைதானா? அதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படி ஒன்றும் தீர்மானிக்கப்படவில்லை.

SRI A. GOVINDASAMY: இந்த அலுமினியம் தொழிற்சாலையை துவக்குவதற்கு ரஷ்ய சர்க்கார் நமக்கு ஏதாவது உதவி தருவதாக வாக்கு அளித்திருக்கிறார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை.